## நமக்கே உரிய போர்க்குணத்துடன் – மக்கள் நலனுக்காகவும் – மாநில உரிமைக்காகவும்

# நம் பயணத்தை எப்போதும் போல் தொடர்வோம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்து அறிக்கை!

**சென்னை, மே 16 -**

**“நமக்கே உரிய போர்க் குணத்துடன் மக்கள் நலனுக்காகவும், மாநில உரிமைக் காகவும் நம் பயணத்தை எப்போதும் போல் தொடர்வோம்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித் துள்ளார்.**

**இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-**



எந்த நிலையிலும் மக்கள் நலனுக் காகவும், மாநிலத்தின் உரிமைக்காக வும், தன் பயணத்தைத் தொய்வின்றித் தொடரும் அரசியல் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைந்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் 2019ஆம் ஆண்டிலிருந்து 2 நாடாளுமன்றத் தேர்தல்கள், 2 சட்டமன்றத் தேர்தல்கள், ஊரக உள்ளாட்சித் தேர்தல், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், இடைத்தேர்தல் கள் எனத் தொடர்ந்து பங்கெடுத்து வரும் தோழமைக் கட்சியின் மதிப்புக்குரிய தலைவர்கள் – நிர்வாகிகள் தொண்டர்கள் அனைவருக்கும் தி.மு.க.வின் தலைவர் என்ற முறையில் என் நன்றியினை உரித்தாக்குகிறேன்.

2026 சட்டமன்றத் தேர்தல் களத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி யில் மேலும் புதிய கட்சிகள் இணைந்து, மாநில நலனுக்கான குரலை ஓங்கி ஒலித்ததையும் நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

தி.மு.க. தலைமையிலான கூட்டணி யில் பங்கெடுத்துத் தேர்தலில் போட்டி யிட்ட கட்சிகள், போட்டியிட முடியாமல் போன, போட்டியிட விருப்பமில்லாத தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட கட்சிகள், இயக்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் அனைவரும் என் மீது வைத்துள்ள நம்பிக்கையையும், தேர் தல் களத்தில் வழங்கிய ஒத்துழைப்பை யும் என்றும் மறக்க மாட்டேன்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அவர்கள், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் அண்ணன் வைகோ அவர்கள், தே.மு.தி.க. பொதுச்செயலாளர் சகோதரி திருமதி. பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. அவர்கள், விடுதலைச் சிறுத் தைகள் கட்சித் தலைவர் சகோதரர் தொல். திருமாவளவன் எம்.பி. அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செய லாளர் மு.வீரபாண்டியன் அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் அவர்கள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்கள், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ அவர்கள்,

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சித் தலைவர் ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள், மனிதநேய ஜனநாயகக் கட்சித் தலைவர் தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. அவர்கள், முக்குலத்தோர் புலிப்படை நிறுவனத் தலைவர் கருணாஸ் அவர்கள், எஸ்.டி.பி.ஐ. கட்சியின் தலைவர் வி.எம். எஸ். முகமது முபாரக் அவர்கள், தமிழ்த் தேசம் கட்சி நிறுவனத் தலைவர் கே.கே. செல்வகுமார் அவர்கள், கிறித்துவ நல் லெண்ண இயக்கத் தலைவர் இனிகோ இருதயராஜ் அவர்கள் ஆகிய மதச்சார் பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார் பில் தேர்தல் களத்தில் போட்டியிட்ட கட்சி களின் தலைவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குவதுடன், தேர்தல் களம் காணாத நிலையிலும் முழுமை யான அர்ப்பணிப்பு உணர்வுடன் பணி யாற்றிய தலைவர்களையும் நினைத் துப் பார்க்கிறேன்.

தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்.குமார் அவர்கள், சமத்துவ மக்கள் கழகம் தலைவர் எர்ணாவூர் நாராயணன் அவர்கள், மக்கள் விடுதலைக் கட்சித் தலைவர் முருகவேல் ராஜன் அவர்கள், ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதிய மான் அவர்கள், புதிய திராவிட கழகம் நிறுவனத் தலைவர் கே.எஸ்.ராஜ்குமார் அவர்கள், திராவிடத் தமிழர் கட்சி தலைவர் வெண்மணி அவர்கள், ஆதித்தமிழர் கட்சித் தலைவர் கு.ஜக்கையன் அவர்கள், தமிழ்ப்புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன் அவர்கள், தமிழ் மாநில தேசிய லீக் பொதுச்செயலாளர் திருப்பூர் அல்தாப் அவர்கள், அகில இந்திய வல்ல ரசு பார்வர்டு ப்ளாக் நிறுவனத் தலைவர் பி.என்.அம்மாசி அவர்கள், திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செய லாளர் சுப.வீரபாண்டியன் அவர்கள்,

> **தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் பங்கெடுத்துத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள், போட்டியிட முடியாமல் போன, போட்டியிட விருப்பமில்லாத, தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட கட்சிகள், இயக்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் அனைவரும் என் மீது வைத்துள்ள நம்பிக்கை யையும், தேர்தல் களத்தில் வழங்கிய ஒத்துழைப்பையும் என்றும் மறக்க மாட்டேன்.**

93 வயதிலும் தமிழ்நாடு முழுவதும் பயணித்துப் பரப்புரை மேற்கொண்ட, நம் தாய்க் கழகமாம் திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் அய்யா கி. வீரமணி அவர்கள், போட்டியிடத் தொகுதிகள் தேவையில்லை; தி.மு.க. தலைமை யிலான கூட்டணியின் வெற்றியே குறிக்கோள் என நேரில் தெரிவித்துப் பணியாற்றிய மக்கள் நீதி மய்யம் தலைவர் நண்பர் கமல்ஹாசன் எம்.பி. அவர்கள், தமிழ்நாடு விவசாயிகள் கொங்கு இளைஞர் பேரவைத் தலைவர் உ. தனியரசு அவர்கள் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி யின் தலைவர் என்ற முறையில் கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகள், தொகுதி ஒதுக்கீடுகள், ஒப்பந்தங்கள், பரப்புரைப் பணிகள் அனைத்திற்கும் பொறுப்பினை ஏற்று, செயல்பட்டவன் என்ற முறையில், தேர்தல் அரசியல் களத்திற்கேயுரிய தன்மையினால் எந்த வொரு கட்சித் தலைவருக்கோ, அதன் நிர்வாகிகளுக்கோ சிறிதளவு மனத்தாங் கல் ஏற்பட்டிருந்தாலும் அதற்கும் பொறுப்பானவனாக என் வருத்தத்தை யும் பதிவு செய்து, தங்கள் அனைவரின் உழைப்புக்கும் ஒத்துழைப்புக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டை முன்னேற்றப்பாதை யில் தொடர்ந்து கொண்டு செல்லவும், மாநில உரிமைகள் பறிபோகாமல் தடுக்கவும் ஒருங்கிணைந்து செயல்பட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி முழுமையான வெற்றியைப் பெற முடி யாமல் போனாலும், வலிமை குன்றாத வகையில் 1 கோடியே 54 இலட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்குகளைப் பெற்று, 73 தொகுதிகளில் வெற்றி பெற்றிருப்பது, தமிழ்நாட்டு மக்கள் நம் மீது வைத்துள்ள நம்பிக்கையையே வெளிப்படுத்துகிறது.

தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, பெரும் பாலான தோழமைக் கட்சிகள் கொள் கைத் தோழமையுணர்வு மாறாமல், தி.மு.க.வுடன் தொடர்ந்து பயணிப்பதை வெளிப்படையாகத் தெரிவித்திருப்பது கழ கத்தின் மீது தோழமைக் கட்சித் தலைவர் கள் வைத்துள்ள உறுதிப்பாட்டை வெளிப் படுத்துகிறது. அதற்கேற்ப, நாம் கொள்கை உறுதிமிக்க அரசியல் கட்சிகளாக ஒன் றுபட்டு நின்று, மக்கள் நலனுக்காகவும், மாநில உரிமைக் காகவும் நம் பயணத்தை எப்போதும் போல தொடர்ந்து மேற் கொள்வோம். தமிழ்நாட்டைக் காக்கும் வலிமையும் அதற்கான போர்க்குணமும் நமக்கே உரியதாகும்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# கழக அமைப்பு முறையில் மிகப்பெரிய மாற்றம் கொண்டு வரப்படும்!

## கழகத் தலைவர் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

எங்க மெத்தனம் ஏற்பட்டுச்சு? என்பதுதான் முக்கியம்.

இதை ஆய்வு செஞ்சாகணும்.

ஒவ்வொரு தொகுதிக்கும் தனிப்பட்ட பல பிரச்சினைகள் இருக்கு.

எல்லாரும் இதை பரிசீலிச்சு பார்க்க ணும். ஆய்வு செய்யணும்.

இது ஒரு தேர்தல் சுழல்தானே தவிர, நாமெல்லாம் எந்திரிக்கவே முடியாத தோல்வி இல்லை..

இனி, கொஞ்சம் கூடுதல் கவனத் தோட, நம்ம செயல்பாடுகளை மாத்தி கிட்டு வேலை செய்யணும்…

முக்கியமா, ஒத்துமையா இருந்து வேலை செய்யணும்….

அதுக்கு முன்னாடி நாம ஒவ்வொருத் தரும் நம்மை நாமே சுய பரிசோதனை செஞ்சிக்கணும்.

முதல்ல, தோல்விக்கான காரணங் கள் குறித்து, தொகுதிவாரியா, நம்ம

அனைத்து மட்ட நிர்வாகிகள் கிட்டயும் கருத்து கேக்கணும்.

அவங்களோட குரலுக்கு முதல்ல நாம காது கொடுக்கணும்.

அதுக்காக தலைமைக் கழகத்தின் சார் புல கள ஆய்வு நடத்தி அறிக்கை தர ஒரு குழுவை அமைக்கப் போறேன்.

அவங்க தமிழ்நாடு முழுக்க, தொகுதி வாரியா, எல்லா தரப்பு நிர்வாகிகளையும் சந்திச்சு பேசி அடுத்த 20 நாட்களுக்குள்ள எனக்கு அறிக்கை கொடுப்பாங்க.

கழக உடன்பிறப்புகள் கிட்டயும் கருத்து கேக்க போறேன்.

உடன்பிறப்புகள் வெளிப்படையா தகவல் சொல்றதுக்காக தனி ‘வெப்சைட்’ நாளைக்கே அறிவிக்கப்படும்.

கழகம், இந்த தேர்தல்ல செஞ்ச தவறுனு நீங்க எதை நினைக்கிறீங்க?

### மாற்றம் குறித்த கருத்தைப் பதிவிடலாம்!

நம்ம கிட்ட என்ன மாற்றத்தை எதிர் பார்க்குறீங்க என அதுல எல்லாரும் சொல்லலாம். இது எல்லாம் கிடைச்ச பிறகு, அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பேன்.

தலைமைக் கழகத்தால அமைக்கப் படும் விசாரணைக் குழு, வெப்சைட் மூலமா கழகத்தின் உடன்பிறப்புகள் மற்றும் நம்ம மேல அக்கறை கொண்ட பொதுமக்கள் சொல்லுற ஆலோசனை களை வெச்சு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பு முறையில மிகப் பெரிய மாற்றத்த கொண்டு வரலாம்னு இருக்கேன். அந்த மாற்றம்தான், நம்ம கழகத்தை இன்னும் ஒரு நூறாண்டு களுக்கு உயிர்ப்போட வெச்சிருக்க போகுது.

கழக அமைப்புல செய்யப்போற இந்த மாற்றங்களுக்கு முன்ன, நாம முதல்ல மாறியாகணும். நாம எல்லாருமே மாறி யாகணும். யாரும் விதிவிலக்கு இல்ல.

இந்த தேர்தல் முடிவுகளுக்கு பிறகு, மாநாடுகள் பொதுக்கூட்டங்கள் ஆர்ப் பாட்டங்கள் இதையெல்லாம் தாண்டுன களமா சமூக வலைத்தளங்கள் உரு வெடுத்திருக்கு.

இதை நான் கடந்த ஐந்தாண்டுகள்ல பல முறை வலியுறுத்துனேன். குறிப்பா, காணொலிக் கூட்டங்கள் நடத்தும்போது, சோஷியல் மீடியாவோட ரீச் பத்தி உங்க கிட்ட சொல்லியிருக்கேன்.

ஆன்லைன் என்பது நமக்கு புதுசு இல்ல. குறிப்பா சொல்லணும்னா, கொரோனா காலகட்டத்துல 3 ஆயிரத் துக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட பொதுக்குழுவை காணொலி யிலேயே நடத்திக் காட்டுன பெருமைக்கு ரிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். டெக்னாலஜிய பயன்படுத்துற துல, இனி நாம கூடுதல் கவனம் செலுத் தணும். கழகத்தினர் ஒவ்வொருத்தரும் சமூக வலைத்தளங்கள்ல நேரடியா பங் கெடுத்து செயல்படணும்.

### பிரச்சார ஸ்டைலை மாற்றியாகணும்!

தி.மு.க.வைப் போல, நம்ம தலைவர் களைப்போல காலத்திற்கேற்ப ஊடகங் களைப் பயன்படுத்துனவங்க வேற யாருமில்ல. பொதுக்கூட்டம், திண் ணைப் பிரச்சாரம், பத்திரிகை, நாடகம், சினிமா, டி.வி.னு கால மாற்றத்திற்கேற்ப, அனைத்து தளங்களையும் கொள் கையை விளக்கும் பிரச்சாரக் களமா வெற்றிகரமா பயன்படுத்துன இயக்கம் நம்ம இயக்கம்.

அதை மனசுல வெச்சிட்டு, இனி வரும் காலத்துல நம்ம பிரச்சார ஸ்டைல், நடத்தைகள், செயல்பாடுகள் எல்லாத்தை யும் மாத்திக்கணும். முன்னாடி டீக்கடை யில உக்காந்து பேசிட்டிருந்த நம்ம அரசியலை, இப்ப சோஷியல் மீடியால பேசியாகணும்.

நேத்து, நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்து முடிச்ச ஆளும்கட்சிக்கு, மெஜா ரிட்டி இல்லனாலும், நம்ம கூட்டணிக் கட்சிகளை வெச்சும் - அ.தி.மு.க.வை உடைச்சும் பெரும்பான்மையை நிரூபிச் சிட்டாங்க.

அ.தி.மு.க. ஆட்கள் எப்படி நடந்துக்கு வாங்கனு சொல்லவே தேவையில்ல.

இந்த நிலைமையில, அடுத்து என்ன நடக்கும்னு உறுதியா சொல்லவே முடியாது. நம்மை பொறுத்தவரை, சட்ட மன்றத்துல முறையான திறமையான கட்சியா நாம செயல்படணும்.

நம்ம அரசியல் எப்படி இருக்க ணும்னா, கடந்த ஐந்தாண்டுகள்ல நாம உருவாக்குன திட்டங்கள் எல்லாம் தொடர்ந்து செயல்பட வைக்கணும்.

நாம தொடங்கிய உட்கட்டமைப்பு பணிகளை, குறித்த காலத்துல கட்டி முடிக்கிற வரைக்கும் நாம அழுத்தம் கொடுத்துட்டே இருக்கணும்.

சட்டமன்ற உறுப்பினர்களா இருக்க கூடியவங்களை ஆதாரங்கள், புள்ளி விவரங்களோட ஷார்ப்பா பேச சொல்லி யிருக்கேன்.

### வெற்றியோ – தோல்வியோ மக்களோடே இருப்போம்!

வெற்றியோ, தோல்வியோ எல்லாரும் வாக்காளர்களைச் சந்திச்சு நன்றி சொல்ல சொல்லியிருந்தேன். இன்னும் அதை முழுசா செஞ்சு முடிக்காதவங்களையும் முடிக்க சொல்லுங்க. நாம மக்கள் கூடவே இருக்கணும். விரைவுல கட்சியை சீர மைச்சு, புது எனர்ஜி கொடுப்போம். இனிமே, ரொம்ப கவனமா, எல்லா விஷயங்களையும் செய்யணும்.

எல்லா நிர்வாகிகள் கூட்டத்துலயும் நான் வலியுறுத்தி பேசுறது, நிர்வாகிகள் ஒற்றுமைதான். இப்பவாச்சும், கோஷ்டி அரசியலை விட்டுட்டு, எல்லாரையும் அரவணைச்சு போங்க. நமக்குள்ளயே ஒற்றுமை இல்லனா வெற்றி என்பது சாத்தியம் இல்ல.

## “யாரையும் குறை சொல்லாதீர்! நானே பொறுப்பு!”

நம்ம கட்சி ‘வீக்கா’ இருக்கும் பகுதியப் பாருங்க, அங்க நிர்வாகிகளுக்குள் மோதல் இருக்கும். நம்ம கட்சி தோற்ற தொகுதிலயும் நிர்வாகிகளின் ஒற்றுமை இல்லாம இருக்கும். அதையெல்லாம் நீங்களே நேர்ல போயி, கவனிச்சு சரி செய்யுங்க. என்னைப் பொறுத்தவரையில அடிமட்டத் தொண்டர்கள் அடிமட்ட நிர்வாகி கள் முழுப்பங்களிப்பைத் தரும் வகையில நாம அவங்களை தயார் செய்யணும்.

மாவட்டச் செயலாளர்கள்தான் மாவட் டத்துக்கு முக்கியம். அதை நான் மறுக்கல. அதுக்காக, மாவட்டச் செயலாளர்கள் மட்டுமே முக்கியம்னு ஆகிடகூடாது. எல்லாருமே முக்கியம்தான். ஒரு கட்டடத் துக்கு எல்லாத் தூணும் முக்கியம்.

ஒருவேளை யாராவது, “என்னால செயல்பட முடியாது”னு நினைச்சா, மனப் பூர்வமாக முன் வந்து விலகிக்கலாம்.

நான் அதை தவறா சொல்ல மாட்டேன். உழைக்கத் தகுதியானவங்க எத்த னையோ பேர் இருக்காங்க. அடுத்து வர்ற தேர்தல்ல கழகம் கண்டிப்பா வெற்றி பெற்றாகணும்.

குறி வெச்சு களப்பணியாற்றுனா, நிச்சயம் வெற்றி பெறுவோம். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு. எந்த பிரதி பலனும் எதிர்பார்க்காம, நீங்க உழைச்ச உழைப்பாலதான், இத்தனை தொகுதி கள்ல நாமும் நம்ம தோழமைக் கட்சி களும் வெற்றி பெற முடிஞ்சுது.

ஒரு தேர்தல்ல தோற்ற நாம் மறு தேர் தல்ல வென்று காட்டி இருக்கோம். உங்க உழைப்பால வெற்றி பெற வெச்சிருக் கீங்க. அதுதான் தி.மு.க.! அந்த நம்பிக் கையோட பணியாற்றுங்க.

இந்த தோல்வியை நினைச்சு யாரும் வருத்தப்பட வேணாம். நாம பல வெற்றி களுக்குச் சொந்தக்காரங்க. நம்மோட இந்த தோல்வி தற்காலிகம்தான்.

**வெற்றியை நோக்கி பயணிப்போம்.**

**திட்டமிடுவோம்.**

**தீவிரமாக உழைப்போம்.**

**மீண்டு வருவோம்!**

**மீண்டும் வெற்றி பெறுவோம்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

